## தலைப்ப 304 – வளிமண்டலவியல் திணைக்களம்

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வளிமண்டலவியல் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுக்களையும் உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் படி, வளிமண்டலவியல் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் உள்ளடக்கப்பட்ட விரிவான அறிக்கை 2019 மே 31 ஆம் திகதி பிரதான கணக்களிப்பு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் படி, வளிமண்டலவியல் திணைக்களத்திற்கு உரித்தான வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆம் திகதி பிரதான கணக்களிப்பு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் படி இவ் அறிக்கை பாராளுமன்றத்தில் சமப்பிக்கப்படும்.

இவ் அறிக்கையில் 1.6 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான வளிமண்டலவியல் திணைக்களத்திற்கு உரித்தான நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையைப் பிரதிபலிக்கின்றன என்பது எனது நோக்காகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்களிப்பு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளிற்கு இணங்க 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிட்டபட்ட ஏற்பாடுகளிற்கு இணங்க சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு கணக்களிப்பு உத்தியோகத்தரினது பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம், அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமாக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரிக்கப்பட்டு பேணப்பட்டு வருவதாக கணக்களிப்பு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தல் வேண்டியதுடன் அம் முறைமையின் ஆக்கபூர்வத்தன்மை தொடர்பாக அவ்வப்போது மீளாய்வு செய்யப்பட்டு இதன் படி, முறைமை ஆக்கபூவமான வகையில் மேற்கொள்ளப்படுவதற்கு அவசியமான மாற்றங்களை மேற்கொள்ளல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக அமைச்சின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமா்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

- ஓட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள சமர்ப்பிக்கப்படுகையில் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்

வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக கணக்களிப்பு உத்தியோகத்தருக்கு தெரிவித்துள்ளளேன்.

## 1.5 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவினதும் 38 ஆம் பந்தியினதும் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் குறித்துரைக்கின்றேன்.

வளிமண்டலவியல் திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்கு உரித்தாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதற்கான தேவைப்பாடு இன்மையால் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டிற்கானவற்றுடன் இணங்கி உள்ளன எனக் குறிப்பிட முடியாதுள்ளது. இதன் காரணமாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகளும் இவ் அறிக்கையில் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணக்கமின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2018 நவம்பர் 21 ஆம் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 7(vi) ஆம் பந்தியின் படி, தயாரிக்கப்பட வேண்டிய நிதிச் சீராக்கக் கணக்குகள் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டதை அடுத்து 2019 ஏப்ரல் 03 ஆம் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இதன் படி, கட்டுநிதிச் சீராக்கற் கணக்குகளின் நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 4,597,737 தொகையான கட்டுநிதி மீதி, திணைக்களத்திக் கட்டுநிதிக் கணக்கிலான ரூபா 500,954 மீதியுடன் இணக்கம்செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் படி, கட்டுநிதிக் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டுகளின் போது இக் குறைபாடு தவிர்க்கப்பட்டு கட்டுநிதிச் சீராக்கற் கணக்கு சரியாகத் தயாரிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |

### 1.6.2 நிதிச் செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| திறைசேரியின் அச்சீட்டுக் குறிப்பின் படி, தேறிய வருமானம் ரூபா 18,089,731 தொகையான போதிலும், நிதிச் செயலாற்றல் கூற்றின் தேறிய வருமானம் ரூபா 18,195,572 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.<br>இவ்வாறே, 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதிக் கணக்கின் வரவு மீதி ரூபா 4,597,939 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் இது சீராக்கப்பட வேண்டிய கட்டுநிதி மீதியாகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தேறிய வருமானம் சரியாகக் காண்பிக்கப்பட வேண்டியதுடன் கட்டுநிதிச் சீராக்கற் கணக்கு மீதி சரியாகக் காண்பிக்கப்பட வேண்டியிருந்தமை. | ரூபா 105,840 தொகையான மீளச் செலுத்தப்பட்ட தொகை தவறுதலாக மொத்த வருடாந்த வருமானத்தில் இருந்து கழிக்கப்பட்டிராததன் காரணமாக இத் தவறு நேர்ந்திருந்தது. |

### 1.6.3 காசுப்பாய்ச்சற் கூற்று

புின்வரும் அலதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது ரூபா 3,602,667 தொகையான வைப்புப் பெறுவனவுகள் மற்றும் ரூபா 2,664,272 தொகையான வைப்புக் கொடுப்பனவுச் செயற்பாட்டு நடைமுறைகளில் இருந்து உருவான காசுப் பாய்ச்சலில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணத்தில் இருந்து அறவிடப்பட்டிருந்த கடன் தவணைப் பணப் பெறுமதியான ரூபா 10,039,322 தொகையும் கடன் மீள்கொடுப்பனவுத் தொகையான ரூபா 9,175,679 தொகையான பெறுமதி முதலீட்டுச் செயற்பாடுகளில் இருந்து உருவான காசுப்பாய்ச்சலாகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | காசுப்பாய்ச்சல் கூற்று சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். | கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்கள் கருத்திற்கொள்ளப்பட்டு எதிர்காலத்தில் காசுப்பாய்ச்சல் சரியாகத் தயாரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.6.4 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்ட ரூபா 86,392 தொகையான கடன் மீதி கடன்பட்டோர் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | கடன்பட்டோர் பதிவேடு சரியாகப் பேணப்பட வேண்டும். | தவறுதலாக கடன் பதிவேட்டில் பதியப்படுவதற்கு முடியாதுபோயிற்று. ஆத் தவறு சீராக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கு குறிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 05 வருடங்களிற்கு முன்னர் கடமையை விட்டு விலகிச்சென்ற உத்தியோகத்தர்கள் மூவரிடம் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 146,072 தொகையான கடன் மீதி மற்றும் உயிரிழந்த உத்தியோகத்தர் ஒருவரிடம் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 6,100 தொகையான கடன் மீதி அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிணையாளிகளிடம் இருந்து அறவிடப்படுவதற்கோ அல்லது திறைசேரியின் இணக்கப்பாட்டுடன் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. |

### 1.6.5 வைப்புகள்

புின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் 02 ஆண்டுகளுக்கு மேலாக தீர்க்கப்பட வேண்டியதாகக் காணப்பட்ட ரூபா 209,834 தொகையான வைப்புகள் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் படி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் தேவையான நடவடிக்கைகளிற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 1.6.6 ஆதன, இயந்திர உபகரணங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆம் ஆண்டின் பின்னர் கொள்வனவு செய்யப்பட்டிருந்த வேறு இயந்திர உபகரணங்கள் அவற்றின் உள்ளபடியான பெறுமதியில் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அவ் ஆண்டிற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்படுவதற்காக நியமிக்கப்பட்டிருந்த குழு அறிக்கையின் பரிந்துரையில் அவற்றின் மதிப்பீட்டுப் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. திணைக்களத்தின் 22 பிராந்திய அலுவலகங்களில் காணப்பட்ட சொத்துக்களின் பெறுமதி மற்றும் தலைமைக் காரியாலயத்தின் ஏனைய இயந்திர உபகரணப் பகுதி கணக்கீடு செய்யப்படுவதற்காக 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தில் உள்ள சகல சொத்துக்களும் கணக்கீடு செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | 2016 ஆம் ஆண்டின் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் அவற்றின் உள்ளபடியான கிரயத்தில் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் இதற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் மதிப்பீட்டிற்காக பணிப்பாளர் நாயகத்தினூடாக ஓர் குழு நியமிக்கப்பட்டிருந்தது. 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் கிடைக்கப்பெற்ற மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியுடனான சொத்துக்கள் CIGAS நிகழ்ச்சித்திட்டத்தினூடாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதில் குறிப்பிடப்பட்ட பிராந்திய அலுவலகங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களிற்கு உரித்தான மதிப்பீட்டு அறிக்கைகள் 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் கணக்குப் பிரிவிற்குக் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. |
| (ஆ) | 2007 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை டொப்லர் ரேடார் முறைமைக்காக ஏற்கப்பட்ட ரூபா 408,825,422 தொகையான செலவினம் சொத்துக்களாகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பொதுத் திறைசேரியின் அறிவுறுத்தலின்’ படி இச் சொத்துக்கள நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இத் திணைக்களத்தால் நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிராததுடன் டொப்லர் ரேடார் முறைமைக்கான சொத்துக்கள் பதிவுசெய்யப்படுவதற்கு உரித்தான பதிவேடுகள் கண்டெடுக்க முடியாதிருந்தது. மேலும், 2016 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் மதிப்பிடப்படுவதற்காக பணிப்பாளர் நாயகத்தால் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருந்ததுடன் அக் குழுவினூடாக 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் வழங்கப்பட்ட அறிக்கையில் டொப்லர் ரேடார் முறைமைக்கான ஏற்பாட்டிற்காக ரூபா 408,825,422 |

| | | |
|---|---|---|
| | | ஏற்கப்பட்டிருந்த போதிலும் இதற்கு உரித்தான உபகரண வகை மற்றும் அவற்றின் பெறுமதி 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் கணக்குப் பிரிவில் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. |

### 1.6.7 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்பட்டிராமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் படி, நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் படி, நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட வேண்டும். | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது மொத்த தேறிய ஒதுக்கீடு ரூபா 647,800,000 தொகையில் ரூபா 360,766,829 தொகை அதாவது 56 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. | மதிப்பீடு தயாரிக்கப்படுகையில் உண்மையான தேவைப்பாடுகள் இனங்காணப்படுவதற்கும் கிடைக்கப்பெற்ற ஏற்பாடுகள் சூட்சுமமான முறையில் பயன்படுத்தப்படுவதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவது அவசியமாகும். | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | மூலதனச் செலவின விடயங்கள் 03 இற்கு உரித்தான ரூபா 201,312,144 தொகையான ஏற்பாடு 27 முதல் 99 சதவீதம் வரையான வீச்சில் சேமிப்புகள் நேர்ந்திருந்தன. | நிதிப் பிரமாணம் 50 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் எய்தப்படும் வகையில் வருடாந்த செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | முல்லைத்தீவு அலுவலகம் திருத்தப்படுவதற்கு நிர்மாணிப்புகள் மற்றும் காணி நிரப்புதல் நடவடிக்கைகளிற்காக கரையோர பாதுகாப்புத் திணைக்களத்தில் இருந்து அறவிடப்பட்டிராததன் காரணமாக மூலதனச் செலவினம் எஞ்சியிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இயந்திரம் மற்றும் இயந்திர உபகரணங்களின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்ட ஒதுக்கீடுகள் ரூபா 106,000,000 தொகையாகக் காணப்பட்டது. இதில் ரூபா 18,500,000 தொகையான மாற்றல் பத்திரத்தின் மூலம் வேறு செலவின விடயங்களிற்கு மாற்றப்பட்டதை அடுத்து ரூபா 73,315,414 தொகையான மிகை நேர்ந்திருந்தது. | மதிப்பீடு தயாரிக்கப்படுகையில் உண்மையான நிதித் தேவைப்பாடு இனங்காணப்படுவதற்கும் கிடைக்கப்பெற்ற ஏற்பாடுகள் சூட்சுமமாகப் பயன்படுத்தப்படுவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | கொள்வனவு செய்யப்படுவதற்கிருந்த ஹைட்ரஜன் மின்பிறப்பாக்கி வெளிநாட்டில் இருந்து உற்பத்தி செய்யப்பட்டு பெறப்படுகையில் அக் கிரயம் தொடர்பாக முன் நிர்ணயிக்கப்பட்ட தீர்மானத்திற்கு வருவதற்கு முடியாதிருந்தது. ஆகையால் 2018 பாதீட்டில் இச் செலவின விடயம் கூடுதலான மதிப்பீட்டுடன் காணப்பட்டது. இதற்கு உரித்தான கொள்வனவு நடைமுறையில் சிக்கலான நிலை ஏற்பட்டிருந்ததன் காரணமாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு இரு முறை நியமிக்கப்படுவதற்கு நேர்ந்தமையால் அவ் அறிக்கைகள் தாமதமானதன் காரணமாக இக் கொள்வனவு மேற்கொள்ளப்பட முடியாதிருந்தது. |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது குறைநிரப்பு மதிப்பீடு ஒன்றின் மூலம் ரூபா 200,000,000 தொகையான ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் இதில் ரூபா 2,197,115 தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததன் காரணமாக ரூபா 197,802,802 தொகையான ஏற்பாடு ஆண்டின் இறுதியில் சேமிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | செயற்திட்டத்திற்காக பயன்படுத்தப்பட்ட வாகனம் திணைக்களத்தின் கீழ் கொண்டுவரப்படுவது, திணைக்களச் செயற்பாட்டை மேம்படுத்துவதனால் இதன் சுங்கக் கட்டணம் செலுத்தப்படுவதற்காக இந் நிதி பயன்படுத்தப்பட்டிருந்தது. |

## 2.2 பொறுப்புகள் மற்றும் பிணைகளிற்கு உட்படல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்பட வேண்டியதாகக் காணப்பட்ட ரூபா 596,011 தொகையான பொறுப்புகள், பொறுப்புக் கூற்றுக்களிற்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | பொறுப்புகள் சரியாகக் கணிப்பிடப்பட வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு
### 3.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| எதிர்வரும் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட கொள்வனவுத் திட்டம் அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டலின் 4.2.1 (இ) மற்றும் 4.2.2 ஆம் பந்தியின் படி, முறையே விபரிக்கப்பட்ட கொள்வனவுத் திட்டம் மற்றும் கொள்வனவுக் கால அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கொள்வனவு வழிகாட்டலின் படி, கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | தவறுதலாக 2018 ஆம் ஆண்டின் போது தயாரிக்கப்பட்டிராத 2019 ஆம் ஆண்டு முதல் தயாரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |

### 3.2 கொள்வனவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தால் தன்னியக்க 37 வளிமண்டலவியல் நிலையங்கள் நாடெங்கிலும் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. இம் முறைமையும் தொடர்புடைய செயற்கைக்கோள் பூமியின் சுற்றுப்பாதையில் இருந்து விலகியுள்ளமையால் வேறு தொடர்பு ஊடகத்தின் தொடர்பைப் பெற்றுக்கொள்வதற்கான | தன்னியக்க வளிமண்டலவியல் நிலையம் முறைப்படி பராமரிக்கப்பட்டு செயற்பாட்டு நிலைக்குக் கொண்டுவரப்பட்டிருந் ததுடன் தொடர்பாடல் தொடர்புகள் குறித்த | குறித்த தொடர்புத் தொடர்பாடலிற்காக ஒப்பந்தத்தின் படி, வலையமைப்பு முறைப்படி ஸ்தாபிக்கப்படாமையாலும் அப் பணி ஒப்பந்தத்திற்கும் உரிய மாதிரிகளின் படியும் பூர்த்தி செய்யப்படுவதற்கு உரிய நிறுவகத்திற்கு எழுத்து மூல அறிவித்தல்கள் |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வனவிற்காக வழங்கப்பட்ட நிறுவகம் 2019 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் அச் செயற்பாட்டைப் பூர்த்திசெய்திருக்காமையால் மீளாய்வாண்டின் போது 06 நிலையங்களில் இருந்து மாத்திரம் தரவுகள் பெறப்பட்டிருந்ததாகக் கண்டறியப்பட்டது. மேலும், அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டலின் 5.4.8 ஆம் பந்தியின் படி, ஐந்து சதவீதத்திற்குக் குறைவற்ற தொகையான செயற்பாட்டுக் காப்பு சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டலின் 8.9.1 ஆம் பந்தியின் பிரகாரம் எழுதிக் கைச்சாத்திடப்பட்ட முறையான ஒப்பந்த உடன்படிக்கை ஒன்று இருக்கவில்லை. 2018 ஆம் ஆண்டின் போது தன்னியக்க வளிமண்டலவியல் நிலையத்தின் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிராமையும் கண்டறியப்பட்டது. | தினத்தில் பெற்றுக்கொள்ளப்படு வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு ஒப்பந்தங்களிற்கு உட்படுகையில் முறையான உடன்படிக்கையில் குறித்த மனுப் பிணை பெறப்பட்டு கொள்வனவு நிர்வாகம் தொடர்பான நடவடிக்கைகள் நெறிப்படுத்தப்பட வேண்டும். | மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ஆ) | ஹைட்ரஜன் மின்பிறப்பாக்கி ரூபா 33,275,000 (வரி இன்றி) பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்டமை தொடர்பாக கொள்வனவின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | கொள்வனவு வழிகாட்டலின் 8.9.1 ஆம் பந்தியின் பிரகாரம் 2019 பெப்ரவரி 28 ஆம் திகதி வரையிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட வழங்குனருடன் உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டிருக்க வில்லை. | கொள்வனவு வழிகாட்டலின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறித்த ஒப்பந்த உடன்படிக்கை இது வரையில் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | வெற்றிகரமான மனுதாரருக்கு ஒப்பந்தம் வழங்கப்படுவது தொடர்பில் முறையாக அறிவிக்கப்படுவதற்கு முன்னர் மனு சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஏனைய போட்டி நிறுவகம் ஒன்றினால் குறித்த கொள்வனலை மேற்கொள்ளாது விடும் படி ஓா கடிதம் அனுப்பி வைக்கப்பட்டு கொள்வனவு ஆவணங்களின் இரகசியத்தன்மை பாதுகாக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. | மனு ஆவணங்களின் இரகசியத்தன்மை பாதுகாக்கப்படுவதற்க ான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிராகரிக்கப்பட்ட மனுதாரரிற்கு தகவல் கிடைக்கப்பெற்றிருந்தமையால் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு ஒன்றினூடாக மீள் மதிப்பீடு மேற்கொள்ளப்படும். |
| (iii) | 2018 ஆகஸ்ட் 13 ஆம் திகதி மனு | உடன்படிக்கைக் | ஒப்பந்தத்தைப் பெற்ற நிறுவகம் |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருந்த நிறுவகத்தால் கட்டளை கிடைக்கப்பெற்று 03 மாதங்களின் போது பொருட்கள் வழங்கப்படுவதற்கு உடன்பட்டிருந்த போதிலும் 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரை மின்பிறப்பாக்கி வழங்கப்பட்டிருக்கவில்லை. | காலத்தின் போது கொள்வனவைப் பூர்த்தி செய்யுமாறு வழங்குனருக்கு அறிவித்தல் அவசியமாகும். | மின்பிறப்பாக்கியை உற்பத்தி செய்து கப்பலில் ஏற்றுவதற்கு 04 மாதங்கள் செல்லும் என அறிவிக்கப்பட்டிருந்தமையால் 2018 ஆம் ஆண்டின போது மின்பிறப்பாக்கியை வழங்க முடியாதிருந்தது. |
| (இ) | 2006 ஆம் ஆண்டின் பாதீட்டுத்திட்டத்தின் படி, டொப்லர் முறைமையை ஸ்தாபிப்பதற்காக ஆகக் கூடியது ரூபா 400 மில்லியன் முதலீடு செய்யப்படுவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருந்தது. 2008 ஆம் ஆண்டின் இறுதியில் இவ் இயந்திரம் கொள்வனவு செய்யப்படுவதற்காக இலங்கை அரசாங்கத்தால் உலக வளிமண்டலவியல் அமைப்பின் பொறுப்பு நிதியத்திற்கு ரூபா 320 மில்லியன் தொகை வைப்புச் செய்யப்பட்டிருந்தது. 2011 ஆம் ஆண்டின் போது இந் நாட்டிற்குக் கிடைக்கப்பெற்ற ரேடார் முறைமை 2014 ஆம் ஆண்டின் போது ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் நீண்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டிருந்ததன் காரணமாக செயலிழந்து காணப்பட்டது. 2018 ஆம் ஆண்டின் போது உலக வளிமண்டலவியல் அமைப்பின் பொறுப்பு நிதியத்தில் இது வரையிலும் எஞ்சியுள்ள அ.டொ. 1,063,946 தொகை பயன்படுத்தப்பட்டு ரேடார் முறைமை திருத்தப்படுவதற்கு வழங்குனர் உடன்பட்டிருந்தார். இதன் படி, இயந்திரங்களின் பாகங்கள் திருத்த வேலைகளுக்காக ஐக்கிய நாடுகளின் உற்பத்திக் கம்பனிக்கு 2017 ஏப்ரல் 21 ஆம் திகதி வரையில் கப்பலில் ஏற்றப்பட்டிருந்ததுடன் இதற்காக ரூபா 5,644,398 தொகையான மேலதிகக் கிரயம் ஒன்று ஏற்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், 2019 மே மாதம் வரை இது மீள திணைக்களத்திற்குக் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | இது தொடர்பாக முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையின் மூலம் குறைபாடுகள் சுட்டிக் காட்டப்பட்டிருந்த போதிலும் செயற்பாட்டைச் சீராக்குவதற்காக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த தரப்பினர் இனங்காணப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்தது. | 2017 ஆம் ஆண்டின் போது கப்பலில் ஏற்றப்பட்ட டொப்லர் முறைமையைப் பழுதுபார்ப்பதற்காகச் செலவிடப்படும் மதிப்பீட்டுத் தொகை அ.டொ. 1,095,939 தொகை என உற்பத்திக் கம்பனியால் குறிப்பிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக உலக வளிமண்டலவியல் அமைப்பின் பிரதிநிதிகளுடன் அமைச்சிச் செயலாளர் மற்றும் பணிப்பாளர் நாயகத்தால் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டு அச் செலவின மதிப்பீடுகள் தொடர்பாக 07 நிபுணர்களைக் கொண்ட குழு ஒன்று நியமிக்க்கப்பட்டிருந்தது. அக் குழு அறிக்கையின் படி, ரேடார் முறைமையை திருத்துவதற்காகச் செலவிடப்படும் தொகையைக் கருத்திற்கொள்கையிலும் அவ் உபகரணங்களின் தொழில்நுட்பத்தை ஒப்பிடுகையில் ஆக்கூர்வமற்றதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. உலக வளிமண்டலவியல் அமைப்பின் மூலம் 2018 யூனு 13 ஆம் திகதிய அறிவுறுத்தலின் படி, இம் முறைமையைத் திருத்துவற்காகச் செலவிடப்பட்ட தொகை மிகவும் உயர்வானமையாலும் தற்போது தொழில்நுட்பம் காலாவதியாகி இருந்தமையாலும் திணைக்களத்திற்கு நலன் எதுவும் கிடைக்கப்பெறமாட்டாது. ஆகையால் பொறுப்பு நிதியத்தின் மீதியில் நிலவும் மீதி மீள பொதுத் திறைசேரிக்கு பெற்றுக்கொள்வது உடன்படிக்கையின் படி செயற்திட்டத்தின் எஞ்சிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சட்ட ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவைப் பத்திரம் ஒன்று தயாரிக்கப்பட்டு இதன் படி |

| | | |
|---|---|---|
| | | நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது. |

**4. நிலையான அபிவிருத்தி இலக்குகள் எய்தப்படல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| நிலையான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகள் சபை 2030 ஆம் ஆண்டு ‘‘நிகழ்ச்சி நிரல்’’ பிரகாரம் சகல அரச நிறுவகத்தாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கு உரித்தாக திணைக்களத்தால் தமது நோக்கெல்லையின் கீழ் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் தொடர்பில் செயற்பட்டிருக்கவில்லை. | நிலையான அபிவிருத்தி இலக்குகள் இனங்காணப்பட்டு இலக்குகள் எய்தப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளது. |

**5. நல்லாட்சி**

**5.1 உள்ளகக் கணக்காய்வு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளகக் கணக்காய்வாளர் பதவி உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அப் பதவி வெற்றிட நிலையில் காணப்பட்டது. | உள்ளகக் கட்டுப்பாட்டு முறையை நெறிப்படுத்துவதற்காக உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். | தொடர்ந்து இவ் வெற்றிடம் பூர்த்திசெய்யப்படுவதற்கான கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. |

**6. மனித வள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 460 ஆகக் | வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை | வேற்றிடங்களை உடனஎயாக நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்குமாறு குறித்த அதிகாரிகளிடம் |

| | | |
|---|---|---|
| காணப்பட்டதுடன் இதில் 87 பதவிகள் வெற்றிட நிலையில் காணப்பட்டன. திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் உட்பட 11 நிறைவேற்றுத் தரங்கள் இவ் வெற்றிடங்களில் உள்ளடக்கப்பட்டிருந்தன. | எடுக்கப்பட வேண்டும் | தொடர்ந்து கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. |